# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580


ஆணை நாள் 08.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12852/B/2022**

திரு.T.மதியழகன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 08.08.2025 அன்று காணொலி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், 14.11.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சீர்காழி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மீது, கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது:

1. *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 1 மாத காலத்திற்குள் மாவட்ட வருவாய் அலுவலர், மயிலாடுதுறை அவர்கள் சட்டப்பிரிவு 18(3)(b)-ன் கீழ்:-*
   - *மனுதாரர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய கோப்பினை மீண்டும் தேடி கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொண்டு, கிடைக்கப் பெற்றால் அதன் நகலினை மனுதாரருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்றதற்கான ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான அறிக்கையினையும்,*
   - *அவ்வாறு கோப்பு பதிவறையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கப் பெறவில்லை எனில், அக்கோப்பு வேறு ஏதேனும் பொது அதிகார அமைப்பில் கிடைக்கப் பெறுமா என்பது குறித்து ஆராய்ந்தும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மயிலாடுதுறை அவர்கள், வட்டாட்சியர், சீர்காழி வட்டம் அவர்கள் மற்றும் உரிய அலுவலர்களிடம், மேற்படி கோப்பு எந்த அலுவலரால் கையாளப்பட்டது, அவர் அக்கோப்பினை பதிவறையில் ஒப்படைத்தாரா, அக்கோப்பு பதிவறையில் ஒப்படைக்கப்பட்டிருந்தால் பதிவறையில் எந்த அலுவலர் வசம் பொறுப்பில் இருந்தது என்றும், பதிவறையில் எவ்வாறு கோப்புகள் பராமரிக்கப்படுகின்றது, அதற்கு யார் பொறுப்பு, பதிவறையிலிருந்து மேற்படி கோப்பு யாரால் பெறப்பட்டது என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு மேற்படி கோப்பு கிடைக்கப் பெறாததற்கு யார் பொறுப்பு*

*என்பதை கண்டறிந்து, அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையினையும்,*

- *கோப்புகள் பதிவறையில் ஒப்படைக்கப்படும்போது உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறதா, பதிவறையில் கோப்புகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா, பதிவறையில் ஒப்படைக்கப்பட்ட கோப்புகள் எவ்வாறு பதிவறையிலிருந்து அலுவலக பயன்பாட்டிற்காக அலுவலர்கள் எடுத்துச் செல்கின்றர் என்றும் (File Movement Register), அவ்வாறு கோப்பு எடுத்துச் செல்லும் நபர்களின் கையெழுத்து பெறப்பட்டுள்ளதா என்றும், அதன் பின்னர் எவ்வாறு கோப்பு மீண்டும் பதிவறையில் ஒப்படைப்படுகின்றது என்றும், அவ்வாறு கோப்புகளை ஒப்படைக்கும் நபரின் கையெழுத்து பெறப்படுகின்றதா என்பது பற்றியும் உரிய அலுவலர்களிடம் விசாரணை மேற்கொண்டு, அதுகுறித்த விரிவான அறிக்கையினையும்,*
- *பிரிவு அலுவலரோ அல்லது கோப்புகளை கையாளும் அலுவலர்களோ பணியிடம் மாறிச்செல்லும்பொழுது, அவர்கள் பயன்பாட்டிலிருந்த ஆவணங்கள் மற்றும் கோப்புகளை எவ்வாறு ஒப்படைப்புச் செய்கின்றனர், அதுகுறித்த பதிவேடு சம்மந்தமாகவும், தொலைந்துபோகும் கோப்புகள் குறித்த விவரங்கள் அவர்களின் மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி, அக்கோப்புகளை பராமரிக்கின்ற பதிவறை எழுத்தர் அல்லது உரிய நபர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என்பது பற்றிய விரிவான அறிக்கையினையும், பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மயிலாடுதுறை அவர்கள் மூலம் இவ்வாணையத்தில் 24.04.2026 அன்று மேற்கூறிய உரிய ஆவணங்களுடன் இவ்வாணையத்திற்கு நேரில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடுகிறது.*
- *மேலும், இவ்வாணையத்தின் வழக்கு எண். SA 7509/B/2025 (விசாரணை நாள்.03.07.2025)-இன் மீதான உத்தரவின் அடிப்படையில், பதிவறையில் ஆவணங்களை பராமரிப்பது மற்றும் பாதுகாப்பது தொடர்பாக, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் & பே. மே. துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் நேர்முகக் கடித எண்.15684/பொது.3(2)/2025-2, நாள்.23.09.2025-இன் வாயிலாக அனைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, அதனடிப்படையில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலக நிர்வகத்தின் கீழ் உள்ள பொது அதிகார அமைப்புகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில், பதிவறையில் ஆவணங்களை பராமரிக்க வேண்டும் என்று இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.*

தகவல் உரிமைச் சட்டம் 2005

2. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி, 24.04.2026-க்கு பதிலாக இவ்வாணையத்தின் அனுமதி பெற்று இன்று (08.05.2026) திரு.த.பாபு, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சீர்காழி வட்டம் அவர்கள் இவ்வாணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, 07.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். மேலும், ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் அவர்கள், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், காத்திருப்பு கிராமம், புல எண்.306 முதல் 490 வரையிலான UDR-க்கு முந்தைய அ பதிவேடு மனுதாரர் திரு.மதியழகன் என்பவரால் கோரப்பட்டது என்றும், மேற்படி அ பதிவேடு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் ஆணையர், தமிழ்நாடு ஆவண காப்பகம் ஆகியவற்றிற்கு மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 06.04.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்டுள்ளது என்றும், இவ்விடங்களில் இருந்து அ பதிவேடு நகல் வரப்பெற்றவுடன் மாவட்ட வருவாய் அலுவலகர் அவர்களின் கடிதத்துடன் இரண்டு வாரங்களில் அறிக்கையை சமர்ப்பிப்பதாக எழுத்து மூலமான கடிதம் வாயிலாக உறுதியளித்து, மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி அறிக்கையை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கும்படி கேட்டுக்கொண்டார். இதனை இவ்வாணையம் ஏற்றுக்கொண்டு, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், மாவட்ட வருவாய் அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் அவர்கள் இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 06.03.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயல்படுத்தி, அதன் அறிக்கையை பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சீர்காழி***

*அவர்கள் மூலம் இவ்வாணையத்திற்கு 05.06.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.*

2. *மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி அறிக்கையை இவ்வாணையத்திற்கு சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12852/B/2022</u>**

**<u>பெறுநர்</u>**

மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
மயிலாடுதுறை மாவட்டம் - 609 001.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம் - 609 110.

**<u>மனுதாரர்:</u>**

திரு.T.மதியழகன்,
அண்ணா நகர், காத்திருப்பு,
சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம் - 609 109.

Copy to: File
AK/PC